நாள்: 11.06.2024
OS.8/2019
பெயர்: ஆண்டவர்
வா.சா.2

<u>குறுக்கு விசாரணை</u>

நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் 11ம் வகுப்பு வரை படித்துள்ளேன். முன்னாள் ராணுவ வீரர் ஆகும். சின்னம்மாள் தாக்கல் செய்துள்ள வழக்கு விபரங்களை படித்துப் பார்த்துள்ளேன். 1, 2 பிரதிவாதிகளை எனக்கு நேரடியாகத் தெரியுமா என்றால் தெரியாது. புரோநோட்டில் கையொப்பம் போட்ட தேதி தெரியும். வாதி உடல்நிலை சரியில்லை என்பதால் அவருடைய மகள் சாட்சியம் அளித்துள்ள விபரம் எனக்கு தெரியும். சின்னம்மாள் மகள் பாக்கியம் தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு விபரம் சொன்னது பாக்கியம் ஆகும். சின்னம்மாள் எனக்கு என்ன உறவு முறை என்றால் நாங்கள் உறவினர் கிடையாது. பிரதிவாதிகள் எங்கு குடியிருக்கிறார்கள் என்று எனக்கு நேரடியாகத் தெரியாது. அவர்களுடைய குடும்ப விபரம் எனக்கு தெரியாது. 1,2 பிரதிவாதி எந்த ஊரைச் சார்ந்தவர்கள் எந்த பள்ளியில் வேலை பார்த்தார்கள் என்றும் எங்கு ஓய்வு பெற்றார்கள் என்றால் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் அசல் வட்டித்தொகை எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று எனக்குதெரியாது. எனக்கு 1, 2 பிரதிவாதிகளை தெரியாது என்றும், அவர்களை அதற்கு முன்னாடி தொயாது. புரோநோட்டில் கையொப்பம் போடும் போது தெரிந்து கொண்டேன். பூதநாராயணத்தேவர் வாதி சின்னம்மாளின் கணவர் என்றால் சரிதான். அவர் பணம் கொடுக்கல் வாங்கல் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவர் மகன் தான் பழனிவேலு என்றால் சரிதான். கடமலைக்குண்டுவைச் சேர்ந்த வைகுண்டசாமியை எனக்கு தெரியும். வாதியிடம் 1, 2 பிரதிவாதிகள் எப்போது கடன் கேட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்ன தேவைக்காக கடன் வாங்கினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. குடும்பத் தேவைக்காக கடன் வாங்கியதாக சொன்னார்கள். என்ன குடும்பச்செலவு என்று தெரியாது. வாதி தனியாக தொழில் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். பிள்ளைகள் கொடுத்த பணத்தை வைத்து தொழில் செய்தார். அவருக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் கிடையாது. வாதி அவரது மகன் பழனிவேலுடன் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. கருப்பத்தேவன்பட்டியில் இருக்கிறார். வா.சா.1 சாட்சி வாதி அவரது சகோதரராருடன் வசிக்கிறார் என்று சாட்சியமளித்திருந்தால் அது

தவறுதான். வாதிக்கு எழுத படிக்கத்தெரியுமா என்பது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் கடமலைக்குண்டு வங்கி கணக்கு எண் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் சேமிப்பு கணக்கு எண் எந்த ஊரில் உள்ளது, அதன் நம்பர் எனக்கு தெரியாது. புரோநோட்டு எழுத சின்னம்மாள் தான் விபரம் சொன்னார். கோட்டைச்சாமி சின்னம்மாளின் மகனின் மருந்துக்கடையில் வேலை பார்த்தார். இன்னொரு சாட்சி விஜயகுமாரை யார் அழைத்து வந்தார் என்று எனக்கு தெரியாது. ஆனால் நான் புரோநோட்டில் கையொப்பம் போடும்போது அவர் அங்கு இருந்தார். நான் 1 மணிக்கு வாதியின் வீட்டிற்கு சென்றேன். அப்பொழுது வாதி பிரதிவாதிகள் அங்கு இருந்தார்கள். பழனிவேலின் மனைவி துர்காதேவி இந்த பிரதிவாதிகள் மீது ஜளு.9.்.2019 என்று வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியாது. அதில் நான் சாட்சியாக கையொப்பம் போடவில்லை. 1ம் பிரதிவாதி அவரது கணக்கிலிருந்து பழனிவேலின் கணக்கிற்கு முழுமையான தொகை அனுப்பியும் வங்கி மூலமாக இந்த வழக்கிற்கும், துர்காதேவி தாக்கல் செய்த வழக்கிற்குமான தொகைகளை முழுவதுமாக செலுத்தி விட்டார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே உள்ள கொடுக்கல் வாங்கல் விபரம் எதுவும் எனக்கு தெரியாது என்றும், அதனால் என்னுடைய சாட்சியம் நம்பகத்தன்மை உள்ள சாட்சியம் அல்ல என்றால் சரியல்ல.